Volume 3 Issue 2 February 2022 E-ISSN: 2582-2063

# சமண சமயத்திற்கு அளித்த தானங்கள் பற்றி – ஓர் ஆய்வு

முனைவர் சே.செந்தூர்பாண்டியன்
*M.A., M.Ed, M.Phil., Ph.D. (History)*, சமூக ஆர்வலர்

**முன்னுரை**

கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மகத நாட்டில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டபோது, மௌரியப் பேரரசனாகிய சந்திரகுப்தன் முடிதுறந்து, பத்ரபாகுமுனிவருடன், பன்னிரண்டாயிரம் சமணத்துறவியருடனும் தென்னகம் நோக்கிப் புறப்பட்டு கன்னட நாட்டிலுள்ள சிரவணபெல்கோலாவில் வந்து தங்கி, அங்கு சமண சமயம் நிலைபெற வழி கோலினர். சந்திரகுப்தனும், பத்ரபாகு முனிவரும் இயற்கை எய்திய பின்னர், பத்ரபாகுவின் சீடராகிய விசாகாச்சாரியர் தலைமையில் ஏராளமான துறவியர் தமிழகத்திற்கு வந்து சமண சமயம் பரவுவதற்கு வழிவகுத்தனர் என்று கருதப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் குகைளில் உறைந்த துறவியருக்கும், ஊர்ப்பகுதிகளில் வாழ்ந்த சமணப் பெருமக்களுக்கும், நெருங்கிய தொடர்புகள் இல்லை எனினும், காலம் செல்லச் செல்ல மக்களது ஈடுபாடு குகைப்பள்ளிகளுடன் மட்டுமின்றி சமுதாயப் பணிகளும் சிறந்து விளங்கலாயின. சாதி பேதம் பாராட்டமை, எளிய வாழ்க்கை நெறிகள், சமயக்கல்வி, மருத்துவ உதவி, உணவளித்தல், அடைக்கலதானம் போன்ற பல்வேறு நற்பணிகளைத் துறவோரும் சிராவகப் பெருமக்களும் மேற்கொண்டமையால் சமண சமயம் வலிமைமிக்க அமைப்பாக உருவெடுக்கலாயிற்று.

**சிற்பங்களும் உலோகத் திருவுருவங்களும்**

தமிழகத்தில் எண்ணிறந்த கல்சிற்பங்களும், உலோகத் திருமேனிகளும் தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றன. சிற்பங்களைப் பொறுத்த வரை அவற்றைப் பாறை சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என இருவகைப்படுத்தலாம். குகைக்-கோயிலின் உட்பகுதியலோ, முகப்புப் பாறையிலோ அல்லது அருகிலுள்ள பாறையிலோ செதுக்கப்பட்டிருக்கும் சமணத் திருவடிவங்கள் முதல் வகையைச் சார்ந்தவையாகும். சிற்பங்கள் வடிக்கப்பட இருக்கும் இடத்தைத் தேர்வு செய்த பின்னர், பாறையை ஒட்டினாற் போன்ற சாரங்களை அமைத்து, அவற்றில் நின்று கொண்டு திருவுருவங்களின் மென்கோட்டு வடிவங்களைச் சிற்பக்கலைஞர்கள் பாறையின் மீது வரைவது வழக்கமாகும். அதன் பிறகு சிற்பங்களைச் சிறிது சிறிதாகச் செதுக்கி இறைவடிவமடையச் செய்வர். இத்தகைய சிற்பங்களை அமைக்கும் பகுதிகளிலோ அல்லது அதற்கு அருகிலுள்ள குடியிருப்புகளிலோ சிற்பியர் உறைந்து பணிகளைக் கவனிப்பது மரபாகும்.

இயற்கையின் சீற்றங்களினால் இன்னலுற்றவர்களுக்கும், வறுமையினால் வாடி வதங்கிய மக்களுக்கும், நோயினால் உழன்றோருக்கும், போர்க் கொடுமையினால் பாதிக்கப்பட்டோருக்கும் அடைக்கலம் கொடுத்தும், அன்னதானம் செய்தும், மருத்துவ உதவி செய்யும் அருந் தொண்டாற்றிய பெருமை துறவியர்களையும், சிராவகப் பெருமக்களையும் சேரும். அஞ்சி வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதற்கென்றே இவர்கள் ‘அஞ்சினான் புகலிடங்களை’ ஏற்படுத்தியுள்ளமை மனித நேயத்தின்பால் இச்சமயத்தவருக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும், பற்றினையும் அறிவுறுத்துவதாகும். இச்சமயத்துறவற நோன்பிகள் சமயப்பணிகளுக்கு மட்டுமின்றிப் பல்வேறு வகையான சமுதாயப் பணிகளுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டமையால், நம் நாட்டில் சமத்துவம், சகோதரத்துவம், அன்புடமை போன்ற நற்பண்புகள் மனித சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றலாயின.

**அரசர்களின் ஆதரவு**

சமணம், புத்தம் ஆகிய சமயங்களைப் போற்றிப் புரந்ததாக அறிய வருகிறோம். பூஜ்யபாதரின் சீடராகிய வஜ்ரநந்தியின் தலைமையில் மதுரையில் திராவிட சங்கம் நிறுவப்பெற்று சமயப் பணிகள் மேற்கொண்டது இக்களப்பிரரது ஆட்சியில்தாம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றைச் சமணச் சான்றோர் யாத்தருளியதும் இந்தக் காலக்கட்டத்தில்தான்.

கி.பி.6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் களப்பிரரைப் பாண்டிய மன்னன் கடுங்கோனும், பல்லவ அரசன் சிம்ம விணுவும் வெற்றிவாகை சூடி தமிழகத்தின் தென் பகுதியில் பாண்டியரது ஆட்சியையும், வடபகுதியில் பல்லவரது ஆட்சியையும், நிலைப்பெற செய்தனர். கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.9ஆம் நூற்றாண்டு வரையிலும் சிறப்புற்றிருந்த இவ்விரு பேரரசுகளும் வைதிக வழிவந்த சைவ, வைணவச் சமயங்களுக்குப் பேராதரவு அளித்தன. இச்சமய நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி மார்க்க நெறியில் தங்களது சமயங்களை வளர்ப்பதற்கு முனைப்புடன் செயல்படலாயினர். அதே சமயத்தில் புத்த, சமண நெறிகளை வன்மையாகக் கண்டித்தும், இச்சமய நெறியாளர்களைப் பழித்தும் வந்திருக்கின்றனர்.

**குகைக் கோயில்கள்**

தொடக்க காலத்தில் துறவியரது உறைவிடங்களாகவும், அவர்களது சீடர்களுக்குக் கல்வி புகட்டும் பள்ளிகளாகவும் விளங்கிய குகைப்பள்ளிகள் கி.பி.8ஆம் நூற்றாண்டிலிருந்து சிற்பவடிவங்களைக் கொண்ட கலைக் கோயில்களாகவும் திகழலாயின. இவற்றிலுள்ள இறை வடிவங்கள் முதலில் துறவியர் வழிபடப் பெறும் 'தரிசன பிம்பங்கள்' ஆகத் திகழ்ந்து, பின்னர் சமணப் பெருங்குடி மக்களும் வழிபடப் பெறுகின்ற நிலையைப் பெறலாயின. குகையின் முகப்புப் பாறையிலோ அல்லது அதற்கு அருகிலுள்ள பாறையிலோ வடிக்கப்பட்ட தீர்த்தங்கரர்கள், யசீயர் ஆகியோரது திருவுருவங்களுக்கு விளக்கிடுவதற்கும், வழிபாடுகள் நடத்துவதற்கும் சிராவகப் பெருமக்கள் ஏற்பாடு செய்துள்ளமையி-லிருந்து இவ்வுண்மை நன்கு புலப்படுத்துகிறது. எனவே சமணத் திருவுருவங்களை உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்திலோ கொண்ட குகைப் பள்ளிகளைக் குகைக் கோயில்கள் என்று அழைப்பதுவே பொருத்தமானதாகும்.

**கோயில்களுக்கு அளித்த தானங்கள்**

இறைவழிபாட்டிலும், சமயத்திலும் பற்றுமிகுந்த மன்னர்களும், மக்களும் பண்டைக்காலத்திலிருந்தே கோயில்களுக்கு மிகுதியான தானங்களைச் செய்து வந்திருக்கின்றனர். இவர்கள் அளித்த நிலங்கள், பொன், பணம், வரிகள், ஆடுகள், பசுக்கள் முதலியவையும், அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானமும் கோயில்களின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரிதும் துணையாக இருந்திருக்கின்றன. இக்கோயில்களின் பொருளாதார நிலை ஏற்றம் பெற்றிருந்த காலை சமயப் பணிகளும், கோயில்களின் வாயிலாகச் சமுதாயப் பணிகளும சிறந்திருக்கின்றன. பொதுவாகக் கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுக்களுள் மிகுதியானவை அவ்வழி பாட்டிடங்களுக்குப் பல்வேறு வகையான தானங்கள் வழங்கப்பெற்ற செய்திகளைக் கொண்டிலங்குவதைக் காண்கிறோம்.

**நிலங்கள் அளித்தமை**

சமணசமயக் கோயில்களுக்கு மிகுதியாக வழங்கப் பெற்ற தானங்கள் நிலங்களாகும். இவ்வாறு அளிக்கப் பெற்றவைகளைப் பள்ளிச் சத்த நிலங்கள் என அழைப்பது மரபாகும். பண்டைய தமிழ்ச் சமுதாயதம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் வேளாண் தொழில்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படலாயிற்று. இதனால் பயிர் செய்வதற்காக நிலங்கள் திருத்தப்பட்டும் அவற்றிற்கு நீர்பாசன வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டும் வந்திருப்பதைக் காணலாம். மக்களது வாழ்க்கைத்தரமும், பொருளாதாரமும்,

சமுதாய நிலையும் பயிர்த் தொழில்களினால் எவ்வாறு மேம்பாடுற்றதோ, அவ்வாறே கோயில்களின் வளர்ச்சியிலும் விளைநிலங்கள் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன.

அசையாச் சொத்துக்களாகிய இந்த நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் சமயப் பணிகளுக்கும் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கோயில்களுக்குரிய நிலங்களைப் பயிரிடுதல், கண்காணித்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கு மனித உழைப்பு அக்காலத்தில் முழுமையாகத் தேவைப்பட்டதால், மக்களுக்கு வேலைவாய்ப்பை நல்கும் வகையில், கோயில்கள் விளங்கியிருக்கின்றன. கோயில்களின் வழிபாட்டுச் செலவு, விளக்கிடுதல், திருவிழாக்கள் பிறசமய நிகழ்ச்சிகள் முதலயின யாவும் சீரும், சிறப்புடனும் நடைபெற இந்த நிலங்களிலிருந்து பெறப்படும் வருமானங்கள் மிகவும் இன்றியமையாதனவாக திகழ்ந்திருக்கின்றன.

**பொன், காசுகள் அளித்தமை**

சமண சமயக் கோயில்களுக்குப் பள்ளிச் சந்த நிலங்கள் மட்டுமின்றி பொன்னும், காசுகளும் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கென வழங்கப்-பட்டிருக்கின்றன. கோயிலுக்குரிய நிலங்களைப் பயிரேற்றி அவற்றின் வருமானம் கிடைப்பதற்கு உரிய காலம் வரையிலும் காத்திருக்க வேண்டும். இதனால் உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதென்பது இயலாது. எனவே இக்கால தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் அறப்பணிகளை மேற்கொள்வதற்கு எளிதான முறையில் பொன், நாணயங்கள் ஆகியவை அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

திருமலையிலுள்ள குகைப்பள்ளிக்கு கி.பி.881ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட அளவு பொன் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது. இதனை இங்குள்ள துறவியரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அறியவருகிறோம். ஆனால் இந்தத் தானம் யாரால், எந்த அளவில், எப்பணிக்காகக் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்வதற்கில்லை.

இங்கு வாழ்ந்த துறவியருள் ஒருவருக்குத் தினமும் உணவு கொடுப்பதற்கும் பொன்னை வழங்கியிருக்கின்றனர். கி.பி.1024ஆம் ஆண்டில் இங்குள்ள ஆதிநாதர் திருவுருவத்தின் முன்பு விளக்கொன்று ஏற்றுவதற்கு இளைய மணிமங்கை என்னும் பெண்மணி 60 காசுகளையும், குந்தவை ஜினாலயத்தில் விளக்கிடுவதற்கென சாமுண்டப்பை என்னும் பெண்மகளார் சிறிது பணத்தையும் வழங்கியிருக்கின்றனர்.

**பசுக்கள், ஆடுகள் வழங்கியமை**

கோயில்களுக்குப் பால்தரும் கன்றுகாலிகளான பசுக்களும், ஆடுகளும் பண்டைக்காலத்தில் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் பால், தயிர் போன்றவை வழிபாட்டிற்கும், நெய் விளக்கிடுவதற்கும் பயன்படுத்தப்-பட்டிருக்கின்றன. இந்த கன்றுகாலிகளின எரு கோயிலுக்குரிய விளை நிலங்களுக்கு இயற்கையான உரமாகப் பயன்படுத்தப் பெற்று விளைச்சல் பெருக வாய்ப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் இவற்றை மேய்த்துப் பராமரிப்பவர்-களுக்கும், பால், தயிர், நெய், மோர் ஆகியவற்றைச் சேகரிப்பவர்களுக்கும், இத்தகைய தானத்தின் வாயிலாக வேலை வாய்ப்பும் கிட்டியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

கரந்தையிலுள்ள குந்துநாதர் கோயிலில் மூலவர் திருவுருவத்திற்கு முன்பாக விளக்கிடுவதற்கெனத் துகிலிக் கிழான் என்பவர் சில ஆடுகளைத் தனமாக அளித்திருக்கிறார். இதே பணிக்காக ஊற்றுக்காட்டைச் சார்ந்த வேளாளர் ஒருவர் பசுக்கள் சிலவற்றை இக்கோயிலுக்குக் கொடுத்ததாகவும் அறியவருகிறோம்.

**விளக்கேற்றுவதற்குப் அளித்த தானங்கள்**

திறக்கோலிலுள்ள குகைப்பளளிக்கு நெல்வேலியைச் சார்ந்த எறந்தி என்பவர் 200 ஆடுகளைக் கொடுத்திருக்கிறார். இவற்றிலிருந்து பெறப்படும் நெய்யிலிருந்து இரண்டு நாழி தினமும் கோயிலில் விளக்கிடுவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. எஞ்சிய நெய், பால், தயிர் போன்றவற்றை விற்று, அந்த வருவாயைக் கொண்டு தினமும் 10 நாழி எண்ணெய்

வாங்கப்பட்டிருக்கிறது. இதனைக் குகைப் பள்ளியில் விளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தி வந்ததாகத் தெரிவிறது.

இந்த தானம் அளிக்கப்பட்ட காலத்தில் (கி.பி.10ஆம் நூற்றாண்டு) இங்கு குகைப்பள்ளியும், அதற்கு முன்பாகப் பாறையில் செதுக்கப்பட்ட தீர்த்தங்-கரர்களது சிற்பங்களும் இருந்தனவேயன்றி கட்டிடக்கோயில் தோற்றுவிக்கப்-படவில்லை. எனவே இந்த ஆடுகளிலிருந்து கிடைத்த நெய்யை இத்திருவுருவங்-களுக்கு முன்பாக விளக்கிடுவதற்கும், விலைக்கு வாங்கிய எண்ணெய்யை குகைப் பள்ளியில் உறைந்த துறவியருக்கு இரவு நேரங்களில் வெளிச்சம் தரும் வகையில் விளக்குகள் எரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது.

கல்வெட்டுக்களில் பசுக்கள், ஆடுகள் முதலியவை விளக்கிடும் பணிக்காகத் தானம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவேயன்றி, வழிபாட்டுச் சடங்குகளுக்கென இவை வழங்கப் பெற்றதாகச் செய்திகள் இல்லை. அதாவது பால் அபிேடகம், நெய் அபிேடகம் போன்றவற்றிற்கென இவை தானமாகக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படவில்லை. பசுக்களையும், ஆடுகளையும் விளக்கேற்றும் பணிக்கென வழங்கியிருந்தாலும், அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் வழிபாட்டிற்கும் தானாகவே பயன்படுத்தப்படும் என்பதால் தான் அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியம் எழவில்லை எனலாம்.

**விளக்கிடும் பணிக்குப் பிறதானங்கள்**

சமணக் கோயில்களுக்கு அளித்த தானங்களுள் நிலங்களுக்கு அடுத்த-படியாக விளக்கிடுவதற்குத்தான் அதிகமாகத் தானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, இப்பணிக்காகப் பசுக்கள், ஆடுகள் ஆகியவை மட்டுமின்றி, வேறு பலவும் வழங்கப்பட்டிருக்கின்றன, மெய்யறிவைப் பெறுவதற்குத் துணையாக இருக்கும் தெய்வமணங் கமழும் திருக்கோயில்கள் எப்போதும் ஒளி பெற்றிலங்கியிருக்கும் வகையில் நந்தா விளக்குகள், சந்தி விளக்குகள் ஆகியவை ஏற்றப் பெற்றிருக்கின்றன.

**வரிகள் ஒதுக்கியமை**

நாடாண்ட மன்னர் பெருமக்களும், அவர்களது ஆணைக்குட்பட்ட குறுநிலத்-தலைவர்களுக்கும் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் சில வரிகளைக் கோயிலுக்கு அளித்து அங்கு சமயப்பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கு வழி வகுத்திருக்கின்றனர். சில சமயம் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலங்களிலிருந்து பெறப்படும் வரிகளை முற்றிலுமாக அகற்றி, அவற்றை இறையிலி நிலங்களாக ஆக்கியும் உதவி செய்திருக்கின்றனர். அரசு பரிந்தவர்களால் இவ்வாறு வரிகளை வழங்கியமையும், வரிச்சுமையை அகற்றியமையும் தானங்கள் செய்வதை ஒத்தவையாகும்.

ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன் என்னும் சிற்றரசனும் பார்சுவநாதர் கோயிலுக்குரிய நிலங்களிலிருந்து தனக்குச் சேரவேண்டிய கடமை என்னும் வரியைத் தவிர எஞ்சியவையாகிய பாடிக்காவல், ஆயம், தறியிறை, தட்டார் பாட்டம் ஆகிய வரிகளை இக்கோயிலுக்கே அளித்துப் பெரும் புகழ் பெற்றிருக்கிறான்.

**முடிவுரை**

சமணக் கோயில்கள் நிலம், ஆடு, பசு, பொன், பணம், வரிகள் முதலிய பலவற்றைத் தானமாகப் பெற்றுச் சிறந்த நிலையில் இருந்திருக்கின்றன. இதனால் இவற்றுள் மிகுதியானவை பொருளாதார மேம்பாடு அடைந்து சமயப்பணிகளை மட்டுமின்றிச் சமுதாயம் ஏற்றம் பெறுவதற்கான பணிகளையும் மேற்கொள்ள முடிந்திருக்கிறது. எனவே தான் இக்கோயில்கள் சமயப்பின்னணியில் மக்கள் சமுதாயத்தை ஒருங்கிணைத்து நிறைவுடனும், மகிழ்வுடனும் வாழ வழிகாட்டி-களாகக் திகழ முடிந்திருக்கிறது.

இவற்றிற்குத் தேவையான மூலக்கற்களைச் சிற்ப வல்லுநர்கள் தேர்ந்தெடுத்துத் தங்களது தொழிற்கூடங்களில் வைத்துச் செதுக்குவது வழக்கமாகும். இப்பணி நிறைவு பெற்ற பின்னர் அவற்றைக் கோயிலின் கருவறைகளிலும், மாடங்களிலும், தளங்களிலும், சிறிய கருவறைகளிலும் நிறுவுவர்.

**நூற்பட்டியல்**


1. ஏ.ஏகாம்பரநாதன், சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி.
2. P.B.Desai, Jainism in South India and Some Jaina Epigraph, pp.25-27.
3. I.Mahadevan, Corpus of Tamil – Brahmi Inscriptions, pp.2-13.
4. சாந்தலிங்கம், மதுரையில் சமணம்.
5. நடன.காசிநாதன், மா.சந்திரமூர்த்தி, சமணத் தடயம்.